Puducherry / Regional Bulletin / Tamil / 18.10hrs. /22.09.2026/Script

வணக்கம்

ஆகாஷ்வாணி – புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : கிருஷ்ணமூர்த்தி ராமசுப்ரமணியன்

தேதி : 22.09.2026 – செவ்வாய்க்கிழமை          நேரம் : மாலை 6.10 மணி

---------------------------------------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

குஜராத் மாநிலம், ஏக்தா நகரில் இன்று மாலை நடைபெற்ற, 72ஆவது தேசிய திரைப்பட விருது வழங்கும் விழாவில், குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு, விருதுகளை வழங்கி சிறப்பித்தார்.

நீர்வளப் பாதுகாப்பு என்பது, அரசு மற்றும் சமூகத்தின் கூட்டுப் பொறுப்பு என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இந்தியாவின் அடுத்த கட்ட வளர்ச்சி, தரத்தை அடிப்படையாக கொண்டு அமைய வேண்டும் என, மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

புதுச்சேரி துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் இன்று முருங்கப்பாக்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், காச நோயாளிகளுக்கு, ஊட்டச்சத்து உணவுப் பைகளை வழங்கினார்.

திரைப்பட விருது (18)

குஜராத் மாநிலம், கெவாடியாவிலுள்ள ஏக்தா நகரில் இன்று மாலை நடைபெற்ற, 72ஆவது தேசிய திரைப்பட விருது வழங்கும் விழாவில், குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு, 2024ஆம் ஆண்டிற்கான தேசிய திரைப்பட விருதுகளை வழங்கி சிறப்பித்தார். விழாவின் போது, திரைப்படத் துறைக்கான மிக உயரிய தாதாசாஹேப் பால்கே விருது, முதுபெரும் கன்னட நடிகர் அனந்த நாகிற்கு வழங்கப்பட்டது. சிறந்த நடிகருக்கான விருது, மம்முட்டி, கார்த்திக் ஆர்யன் ஆகியோருக்கும், சிறந்த நடிகை விருது, நடிகை யாமி கவுதமுக்கும் வழங்கப்பட்டது. சிறந்த திரைப்பட விருது, Article-370 திரைப்படத்திற்கும், சிறந்த பொழுதுபோக்கு திரைப்படத்திற்கான விருது, கல்கி-2898 AD திரைப்படத்திற்கும், சிறந்த இயக்குநர் விருது, ராஜ்குமார் பெரியசாமிக்கும், வழங்கப்பட்டன. சிறந்த தமிழ்த் திரைப்படத்திற்கான விருது, ராயன் திரைப்படத்திற்கு வழங்கப்பட்டது. விழாவில் குஜராத் ஆளுநர் ஆச்சார்ய தேவ விரத், முதலமைச்சர் திரு. பூபேந்திர படேல், மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். ஏக்தா நகரைப் போலவே, இனி நாட்டின் முக்கிய சுற்றுலாத் தலங்களில், தேசிய திரைப்பட விருது வழங்கும் விழா நடத்தப்படும் என மத்திய அமைச்சர் திரு. வைஷ்ணவ், விழாவில் பேசுகையில் அறிவித்தார்.

மோடி – கட்டுரை (10)

நீர்வள பாதுகாப்பு என்பது, அரசு மற்றும் சமூகத்தின் கூட்டுப் பொறுப்பு என்றும், நீர்வள பாதுகாப்பை மேம்படுத்த, வலுவாக அமைப்பு முறைகள், அறிவியல் தீர்வுகள் மற்றும் மக்கள் பங்கேற்பு அவசியம் என்றும் பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். இது குறித்து, மத்திய ஜல்சக்தி அமைச்சர் திரு. சி.ஆர். பாட்டீல் எழுதியுள்ள கட்டுரை ஒன்றை, பிரதமர், சமூக ஊடகத்தில் பகிர்ந்து கொண்டுள்ளார். பருவநிலை மாற்றங்களை சமாளிக்கும் திறனுடன் கூடிய, நீடித்த நீர்வள மேம்பாட்டு வசதிகளைக் கட்டமைக்க, ஜல்ஜீவன் இயக்கம், நமாமி கங்கே திட்டம், மற்றும், தொழில் ரீதியிலான பல்வேறு முயற்சிகளை அரசு மேற்கொண்டு வருவதை அமைச்சர் திரு. பாட்டீல் தமது கட்டுரையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

மகளிர் கிரிக்கெட் (17)

ஜப்பானில் நடைபெறும் ஆசிய விளையாட்டுப் போட்டிகளின் மகளிர் கிரிக்கெட் பிரிவில் தங்கப்பதக்கம் வென்றுள்ள இந்திய மகளிர் கிரிக்கெட் அணிக்கு, பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். நடப்பு ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்தியாவிற்கு கிடைத்துள்ள இந்த முதலாவது தங்கப்பதக்கம், இந்திய கிரிக்கெட் உலகிற்கே அற்புதமான வெற்றி என்று, சமூக ஊடகத்தில் அவர் கூறியுள்ளார். திறமை, நம்பிக்கை மற்றும் அணியினரின் அபாரமான கூட்டு முயற்சியே இந்த வெற்றிக்கு காரணம் என்றும், நாட்டிற்கே பெருமையான இந்த வெற்றியினால், நாட்டின் இளம் கிரிக்கெட் வீரர்கள் பெருமளவில் ஊக்கம் பெறுவார்கள் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார். ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் மகளிர் கிரிக்கெட் பிரிவில், இந்தியா-இலங்கை அணிகளுக்கு இடையே நடைபெற்ற இறுதிப் போட்டியில் இந்திய அணி 147 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தங்கப்பதக்கம் வென்றது. இப்போட்டியில் முதலில் ஆடிய இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 3 விக்கெட் இழப்பிற்கு 216 ரன் எடுத்தது. அடுத்து ஆடிய இலங்கை அணி, 69 ரன் மட்டுமே எடுத்திருந்த நிலையில், 16ஆவது ஓவரிலேயே ஆட்டமிழந்து தோல்வியடைந்தது.

நிர்மலா -1 (10)

இந்தியாவின் அடுத்த கட்ட வளர்ச்சிக்கு, தரமே, அடிப்படையாக அமைய வேண்டும் என மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில் அகில இந்திய நிர்வாகவியல் சங்கத்தின் 23 தேசிய மாநாட்டில் உரையாற்றிய அவர், ஒவ்வொரு ஆலை, நிர்வாக குழு சேவை மையம், மற்றும், ஆராய்ச்சி அமைப்பிலும், தரக் குறைபாடுகளைக் களைந்து, உயர் தரத்தை எட்ட, முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்றார். தொழில்முறை நிர்வாகிகளும், கார்ப்பரேட் தலைவர்களும், தரம் பற்றிய உணர்வை அனைத்து நிலைகளிலும் பரப்ப வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார். மத்திய நிதியமைச்சரின் உரை குறித்து கூடுதல் விவரங்கள்...

(வாய்ஸ்)

நிர்மலா -2 வாய்ஸ் (19)

(வாய்ஸ்)

தற்போது உலகப் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள் நிச்சயமற்ற தன்மையினால் உலக வர்த்தகம் மற்றும் பொருள் விநியோகச் சங்கிலியிலும், பல மாற்றங்கள் உருவாகி வருவதை, நிதியமைச்சர் திருமமதி நிர்மலா சீதாராமன் தமது உரையில் சுட்டிக்காட்டினார். சூழ்நிலைகளைச் சமாளிக்க நெகிழ்வுத் தன்மை அவசியம் என்றாலும், மற்ற நாடுகளிடம் இருந்து தனிமைப் படுத்திக் கொள்வதை, நெகிழ்வுத் தன்மையாக கருத முடியாது என்று அவர் கூறினார். உள்நாட்டு உற்பத்தி

திறனை அதிகரித்து, நிதி நிலவரத்தை வலுப்படுத்திக் கொள்வதன் மூலமாகவே, உலகப் பொருளாதார அதிர்வுகளில் இருந்து நம் நாட்டின் வளர்ச்சியை பாதுகாத்துக் கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

உலக அளவில் பொருளாதார வளர்ச்சி, 3 சதவிகிதத்திற்கு கீழாக குறைந்து விட்ட நிலையிலும், இந்திய பொருளாதாரம், சுமார் 8 சதவிகித அளவில் தொடர்ந்து வளர்ச்சியடைந்து வருவதாக நிதியமைச்சர் கூறினார். உலக நாடுகளின் கடன் தீர்ப்பு திறனை மதிப்பிடும் ஜப்பானிய நிறுவனம், அண்மையில் இந்தியா குறித்த மதிப்பீட்டை உயர்த்தி இருப்பதை அவர் சுட்டிக் காட்டினார். பருமப் பொருளாதார ரீதியில், இத்தகைய வலுவான நாடாக இந்தியா திகழ்வதன் காரணமாகவே, உலக நாடுகள் இந்தியாவுடனான உறவுகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

அமித்ஷா (05)

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா இன்று புதுடெல்லியில், மாநில போதைப் பொருள் எதிர்ப்பு பணிக் குழுக்களின் தலைவர்கள் மாநாட்டை தொடக்கி வைத்தார். போதைப் பொருள் கட்டுப்பாட்டுக் கழகத்தின் புதிய இணைய தளத்தையும், போதை எதிர்ப்பு தொடர்பான விழிப்புணர்வு விளம்பரப் படங்களையும் அவர் வெளியிட்டார்.

சேவா சங்கல்ப் -1 (14)

மக்கள் சேவை மூலமான தேச சேவை என்ற தாரக மந்திரத்தின் அடிப்படையில், பொது சேவையில் 25 ஆண்டுகளை பூர்த்தி செய்யும் பிரதமர் திரு நரேந்திர மோடியின் சேவைப் பயணம், இன்று வரை அயராத உறுதிப்பாட்டுடன் தொடர்கிறது. சேவை மற்றும் நல்லாட்சி என்னும் பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வைக்கு ஏற்ப, 2047-ஆம் ஆண்டிற்குள் முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்தும் இலக்கை நோக்கி, நாடு தொடர்ச்சியாக பயணித்து வருகிறது. அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி-அனைவருக்கும் சமூக அதிகாரம் என்னும் அரசின் கொள்கையினால், நாட்டு மக்களின் வாழ்க்கையில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. சேவா சங்கல்ப் அபியான் என்னும், இந்த சிறப்பு தொடரில், பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலை நோக்கு பார்வை அடிப்படையிலான, Make in India இயக்கத்தினால், உள்நாட்டு உற்பத்தி துறை ஊக்கம் பெற்று வருவது குறித்து, தற்போது காண்போம்…

(வாய்ஸ்)

சேவா சங்கல்ப் – 2 வாய்ஸ் (18)

(வாய்ஸ்)

2014ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட Make in India திட்டம், சிவப்பு நாடா நடை முறைகளைக் குறைத்து, வர்த்தகம் புரிவதை எளிமையாக்குவதன் மூலமாகவும், முதலீடுகளை அதிக அளவில் ஈர்த்து, உள்நாட்டு உற்பத்தி வசதிகளை வலுப்படுத்துவதன் மூலமாகவும், உலக

நாடுகளுடன் போட்டியிடக் கூடிய முக்கிய உற்பத்தி கேந்திரமாக இந்தியாவை மேம்படுத்துவதை நோக்கமாக கொண்டுள்ளது. தனிப்பட்ட உற்பத்தி ஆலைகள் முதல், முழு விநியோகச் சங்கிலியும் பயன்பெறும் வகையிலான அணுகுமுறை அடிப்படையில், நாட்டில் தொழில் நெடும்பாதைகள் அமைக்கப்பட்டு, தேசிய அளவிலான ஒற்றைச் சாளர முறையில் தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான அனுமதிகள் வழங்கப்படுகின்றன. தொழில்துறைக்கு ஆதரவாக போக்குவரத்து துறையிலும் பல்வேறு சீர்திருத்தங்கள் கொண்டுவரப் பட்டுள்ளன. செமி கண்டக்டர் மற்றும் உதிரி பாகங்களின் உற்பத்தியை ஊக்குவிக்க தனித் திட்டங்களும், பல்வேறு உற்பத்தி துறைகளுக்கு ஆதரவாக, உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத் தொகை திட்டங்களும் அமல்படுத்தப் படுகின்றன. இத்திட்டங்களால், நாட்டின் மின்னணு பொருள் உற்பத்தி, 2014-15ஆம் ஆண்டின் 1.9 லட்சம் கோடி ரூபாய் என்ற அளவில் இருந்து, கடந்த நிதியாண்டில், 13.11 லட்சம் கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.

சேவா சங்கல்ப் – 3 வாய்ஸ் (16)

நாட்டின் மின்னணு பொருள் உற்பத்தி, 4.24 லட்சம் கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. மொபைல் தொலைபேசிகளின் ஏற்றுமதி பெரிய அளவில் அதிகரித்துள்ளது. மின்னணு பொருட்களின் இறக்குமதி நாடாக இருந்த இந்தியா, தற்போது, நிகர ஏற்றுமதி நாடாக மேம்பட்டு இருப்பதற்கும், Make in India திட்டமே காரணமாகும். 14 துறைகளுக்கான, உற்பத்தியுடன்

இணைந்த ஊக்கத் தொகை திட்டத்தினால், இத்துறைகளில் முதலீடுகள் 2.40 லட்சம் கோடி ரூபாயைத் தாண்டி அதிகரித்துள்ளது. நடப்பாண்டு மார்ச் மாதம் வரை, 14 லட்சத்திற்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புகளை இத்துறைகள் உருவாக்கியுள்ளன. இந்தியாவில் தற்போது, மக்கள் பயன்படுத்தும் மொபைல் தொலைபேசிகளில் 99.2 சதவிகிதம் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டதாக நிலைமை மாறியுள்ளது. நாட்டில் 300க்கும் மேற்பட்ட மொபைல் போன் உற்பத்தி நிறுவனங்கள் தற்போது செயல்பட்டு வருவதும், இத்துறையில் பணிபுரியும் தொழிலாளர்களில், சுமார் 70 சதவிகிதம் பெண்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. Make in India திட்டத்தினால், Made in India முத்திரை, உலக அந்தஸ்துக்கு உயர்ந்து இருப்பதில் ஐயமில்லை.

புதுச்சேரி காசநோய் (10)

காசநோய் இல்லாத இந்தியா திட்டத்தின் கீழ், முருங்கப்பாக்கம் ஆயுஷ் ஆரோக்ய மந்திர் வளாகத்தில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, காச நோயாளிகளுக்கு, ஊட்டச்சத்து உணவுப் பைகளை வழங்கினார். காச நோய் ஒழிப்பு பணிகளில் சிறப்பாக செயல்பட்ட மருத்துவ அதிகாரிகள், செவிலியர்கள் மற்றும் தன்னார்வ தொண்டர்களை, துணை நிலை ஆளுநர் சான்றிதழ் வழங்கிப் பாராட்டினார். நிகழ்ச்சியில்

சட்டமன்ற உறுப்பினர் திரு. அய்யப்பன், சுகாதாரத்துறை செயலர் திரு.எல்.குமார். துறையின் இயக்குநர் டாக்டர் செவ்வேள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

வானிலை (18)

இன்று மத்திய மேற்கு மற்றும் அதை ஒட்டிய வடமேற்கு வங்கக்கடல் பகுதியில் நிலவும் காற்றழுத்த தாழ்வு மண்டலம், ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவடைந்து, மேற்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து, நாளை இரவு, அல்லது, 23ஆம் தேதி அதிகாலை வாக்கில், விசாகப்பட்டினம் மற்றும் போபால்பூர் இடையே, வடக்கு ஆந்திரா மற்றும், தெற்கு ஒடிசா கடலோரப் பகுதிகளைக் கடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இன்று மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், மற்றும், தென் தமிழகத்தின் ஓரிரு இடங்களில் பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும் என்றும், தமிழகத்தின் இதர பகுதிகள், மற்றும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில், லேசான மழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. வரும் 28ஆம் தேதி வரை, மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. சூறாவளிக் காற்றுக்கு வாய்ப்பு அதிகமுள்ள தமிழக கடலோரப் பகுதிகள், மற்றும், வங்கக் கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர். இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக,

கடலூர் மாவட்டம் பூங்குணத்தில், 8 சென்டிமீட்டர் மழை பதிவாகியுள்ளது. பாகூரில் 4 சென்டிமீட்டர், மற்றும், காரைக்காலில் 1 சென்டிமீட்டர் மழை பெய்துள்ளது.

விஜய் (12)

தமிழகத்தில் 6 முதல் 8ஆம் வகுப்பு வரையுள்ள அரசுப் பள்ளி மாணவர்களுக்கான காலை உணவுத் திட்டத்தை, முதலமைச்சர் திரு. விஜய் இன்று தொடக்கி வைத்தார். சென்னை திருவான்மியூரில், காந்தி கிராமம் அரசு நடுநிலைப் பள்ளியில், இதற்கான விழா நடைபெற்றது. மாநிலத்தில், 15 ஆயிரத்து 454 அரசுப் பள்ளிகள் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளைச் சேர்ந்த, சுமார் 15 லட்சத்து 30 ஆயிரம் மாணவர்கள், இந்த நீட்டிக்கப்பட்ட காமராஜர் காலை உணவுத் திட்டத்தினால் பயன்பெற உள்ளனர். நடப்பு நிதியாண்டில் இத்திட்டத்திற்கான பட்ஜெட் ஒதுக்கீடு 217 கோடி ரூபாய் உயர்த்தப்பட்டு, 724 கோடி ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தேர்தலுக்கான மாதிரி நடத்தை நெறிமுறைகள் காரணமாக, செங்கல்பட்டு மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் தற்போது இத்திட்டம் அமலாகாது என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

குஜராத் மாநிலம், ஏக்தா நகரில் இன்று மாலை நடைபெற்ற, 72ஆவது தேசிய திரைப்பட விருது வழங்கும் விழாவில், குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு, விருதுகளை வழங்கி சிறப்பித்தார்.

நீர்வளப் பாதுகாப்பு என்பது, அரசு மற்றும் சமூகத்தின் கூட்டுப் பொறுப்பு என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இந்தியாவின் அடுத்த கட்ட வளர்ச்சி, தரத்தை அடிப்படையாக கொண்டு அமைய வேண்டும் என, மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

புதுச்சேரி துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் இன்று முருங்கப்பாக்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், காச நோயாளிகளுக்கு, ஊட்டச்சத்து உணவுப் பைகளை வழங்கினார்.

இத்துடன் இந்தச் செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. RSS/KR/VM
Puducherry / Regional Bulletin / Tamil / 18.10hrs/ 22.09.2026 / Script